www.Padasalai.Net www.Trb Tnpsc.com

3RM

**10** - ஆம் வகுப்பு

# மூன்றாம் திருப்புதல் தேர்வு – 2024

## தமிழ்

காலம் : 3.15 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 1 x 5 = 15

1. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள்கள் எது?
   அ) குலா ஆ) சீலா இ) துலா ஈ) இலா
2. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
3. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மருவூர்பாக்கம் அமைந்துள்ள நகரம்?
   அ) மதுரை ஆ) புகார் இ) வஞ்சி ஈ) முசிறி
4. "அருளைப் பெருக்கி அறிவை திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடியில் குறிப்பிடப்படுவது எது?
   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) இறைவன் ஈ) கல்வி
5. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதியில் குறிப்பிடப்படுவது எது?
   அ) இலையும் சருகும் ஆ) சோகையும் சண்டும் இ) சருகும் சண்டும் ஈ) தாளும் ஓலையும்
6. *'அருந்துணை'* என்பதைப் பிரித்தால் .......
   அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை
7. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
   அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?
   இ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
8. *'எற்பாடு'* என்பது ......... அ) ஞாயிறு உதிக்கும் நேரம்
   ஆ) ஞாயிறு மறையும் நேரம் இ) நண்பகல் நேரம் ஈ) நடுஇரவு நேரம்
9. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க அ) உழவு, மண், ஏர், மாடு
   ஆ) மண், மாடு, ஏர், உழவு இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
10. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ..........
    அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
11. *'ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகள் இலக்கியம்"* இக் கூற்று யாருடையது?
    அ) பாரதியார் ஆ) ஜெயகாந்தன் இ) கு. அழகிரிசாமி ஈ) பாவாணர்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

*"வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்*
*மாளாத காத ல் நோயாளன் போல் மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா நீ*
*ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.*

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
    அ) நற்றிணை ஆ) சிலப்பதிகாரம் இ) புறநானூறு ஈ) பெருமாள் திருமொழி



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

41. மேல்நிலை வகுப்ப சேர்க்கை விண்ண...

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) குலசேகராழ்வார் ஆ) ஔவையார் இ) நல்வேட்டனார் ஈ) இளங்கோவடிகள்

14. மாளாத இத்தொடரின் பொருள் யாது?

அ) தீராத ஆ) விளையாட்டு இ) சுட்டாலும் ஈ) புண்

15. பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகை சொற்களை குறிப்பிடுக.

அ) வாளால் அறுத்து ஆ) மாறாத மாயத்தால் இ) வாளால் மாளாத ஈ) ஆளா அடியேனே

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

II **எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 21 கட்டாய வினா.** 4 x 2 = 8

16. **விடைக்கேற்ற வினா அமைக்க.**

அ) உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே.

ஆ) சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்

17. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

18. 'அரியவற்றுள் எல்லாம் அரிது' என வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

19. குறிப்பு வரைக : அவையம்

20. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

21. *'பொருள்'* என முடியும் குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 5 x 2 = 10

22. **கலைச்சொல் தருக.**

1) belief 2) Emblem

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.**

***எதிர்மறையாக எழுதுக.*** அ) மீளாத்துயர் ஆ) எழுதாக் கவிதை

23. சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் - இத்தொழிற் பெயர்களை வகைப்படுத்துக.

24. பொறித்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

26. ***பழமொழியை நிறைவு செய்க.***

அ) அளவுக்கு ................. . ஆ) உப்பில்லா ....................... .

27. ஆசிரியப்பாவின் வேறு பெயர் யாது? ஆசிரியப்பாவின் ஓசை யாது?

28. **வழுவமைதிகளை இனங்கண்டு எழுதுக.**

அ) சிறிய வயதில் இருந்தே இந்த மரத்தில் தான் ஊஞ்சல் கட்டி விளையடுவோம்.

ஆ) "வாடீ செல்லம்" எனத் தாய் தன் மகளை அழைக்கிறாள்.

**பகுதி - III ( மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

IV. **எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி.** **2 x 3 = 6**

29. *'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'*. இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துகாட்டுகள் தருக.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

31. **பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

(தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.) பாட்டும், வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. விழாக்களில் புலி வேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர். தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ, ஆடுவர். புலியைப் போன்று நடந்தும், பதுங்கியும், பாய்ந்தும் எம்பிக்குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப் பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

அ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் நிகழ்கலை எது?

ஆ) புலி ஆட்டம் ஆடுவோர் எத்தகைய அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்?

இ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34 - ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.** 2 x 3 = 6

32. "சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34. அடிப்பிறழாமல் எழுதுக. "அருளை பெருக்கி" எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடல். ***(அல்லது)***
"நவமணி வடக்க யில் போல் " எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல் எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூப் பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பகுதியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

36. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

37. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 x 5 = 25

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. **(அல்லது)**

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. **( அல்லது )**

ஆ) நாளிதல் ஒன்றின் பொங்கல் மலரில் *'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்'* என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

41. மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம் நிறைவு செய்க. பெயர் : குணசேகரன் பிறந்த தேதி : 05.06.2008, தந்தை பெயர் : ராஜாமணி, புதுதெரு, தஞ்சாவூர், அவன் பெற்ற மதிப்பெண் : 458/500. தேர்வாளர் தன்னை குணசேரன் ஆக கருதி கொடுக்கப்பட்ட படிவத்தை பூர்த்தி செய்க.

42. அ) பள்ளியிலும், வீட்டிலும் நீங்கள் நடந்து கொள்ளும் முறையினை பட்டியலிடுக. **(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க :**

The golden sun gets up early on the morning and starts its bright rays to fade away the dark.The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion.The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything present.

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும் போது இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம் தானே எண்ணெய்யாக இருக்க முடியும்? பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் சான்றோர்க்குக் கடன் என்கிறார் நல்லந்துவனார், அவ்வாறே, உண்மையான செல்வம் எனபது துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

1) அன்பு என்னும் சுடருக்கு எண்ணெய்யாக இருப்பது எது?
2) சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எதைக் காட்டுகின்றன?
3) உண்மையான செல்வம் என்று நல்வேட்டனார் குறிப்பிடுவது எதனை?
4) உதவி செய்தலை 'உதவியாண்மை' என்று குறிப்பிடுபவர் யார்?
5) சான்றோர் கடனாக நல்லுந்துவனார் குறிப்பிடுவது யாது?

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 x 8 = 24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. ***( அல்லது )***

ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - அருகி வருவதற்கான காரணங்கள் - வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - பற்றி நாளிதழுக்கான தலையங்கள் எழுதுக.

44. அ) *``அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்''* என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. ***( அல்லது )***

ஆ) அழகிரிசாமியின் *`ஒருவன் இருக்கிறான்'* சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) உங்கள் பகுதியில் நடை பெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. ***(அல்லது)***

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

*முன்னுரை - தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - பொதுவாழ்வில் தூய்மை - மக்கள் பணியே மகத்தான பணி - முடிவுரை.*



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com